**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.838/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | சுமித்ரா, வயது 39 |
| Father Name/Husband Name | : | ராஜகோபால் |
| Village | : | சித்திரம்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பெண் தலைமை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.07.2025 ஆம் தேதி கோவில்பட்டி மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது காலை 07.00 மணியளவில் நான், தலைமை காவலர் 2306 பாலகுருநாதன் மற்றும் பெண் தலைமை காவலர் 2100 மாரியம்மாள் ஆகியோர் சகிதம் ஆய்வாளர் உத்தரவின்படி ரோந்து செய்து கண்காணித்து வந்த போது மேற்படி கோவில்பட்டி – கொப்பம்பட்டி ரோட்டில் ரோந்து செய்து வரும்போது சந்தேகத்துடன் பிளாஸ்டிக் சாக்கு பையுடன் நின்றுகொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட முயற்சித்த நபர் பின்னர் பெயர், விலாசம் கேட்டுத் தெரிந்து தீத்தாம்பட்டி, மேலத்தெருச் சேர்ந்த சித்தவன் மகன் அய்யப்பன், வயது 66 என்பவர் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்கு பையை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 180 ML அளவு கொண்ட Golden choice deluxe Brandy பாட்டில்கள் 26 எண்ணம் வைத்திருந்தார்.

2 மேற்படி நபரை விசாரித்தபோது டாஸ்மாக் கடையிலிருந்து பிராந்தி பாட்டிலை வாங்கி அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். மேற்படி நபர் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்க வைத்திருந்த குற்றத்திற்காக அன்றைய தினம் காலை 08.00 மணிக்கு

மேற்படி சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி, அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பம் செய்ய முன்வராததால் போலீசார் பார்ட்டியாகிய நாங்களே கையொப்பம் செய்தோம். மேற்படி சொத்து சகிதம் எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து அன்றைய தினம் காலை 09.00 மணியளவில் நிலைய குற்ற எண். 90/2025 U/s 4(1) (C) TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய மேற்படி தலைமை காவலருக்கு உதவியாக இருந்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

3 சம்பவ இடத்திற்கு நீங்கள் செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 07.00 மணி இருக்கும். அத்தாட்சியில் வழக்குச் சொத்துக்கள் காலை 07.00 மணிக்கு கைப்பற்றபட்டதாக குறிப்பிடபட்டு பின்பு 08.00 மணி என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் ரோந்து சென்ற விவரத்திற்கு தனி அறிக்கை பிறப்பித்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தனி அறிக்கையில் பொது இடத்தில் வைத்து மது விற்பனை செய்தததாக துலங்காது என்றால் சரிதான். தனி அறிக்கையில் வீட்டிற்கு முன்பு வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றபட்டதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல, வீட்டிற்கு முன்பு கைப்பற்றபட்டது.

4 நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றபோது தனி நபர்கள் மது வாங்கி கொண்டிருந்ததாக தனி அறிக்கையில் துலங்காது என்றால் சரிதான். நாங்கள் ரோந்து சென்ற விவரங்கள் எங்களது பாக்கெட் டைரியில் துலங்கும் என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியை ஆய்வாளர் விசாரணையில் கொடுத்தோம். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்பித்தால்தான் நீங்கள் ரோந்திற்கு சென்றீர்களா என்று தெரிய வரும் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன மதுபாட்டில்களைதான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்பதால்தான் முதல் விசாரணைக்கும், குறுக்கு விசாரணைக்கும் வழக்கு சொத்து குறித்து முரண்பாடுகள் காணப்படுகிறது என்றால் சரியல்ல.

5 நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றாலும், எதிரியிடம் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபடவில்லை என்றாலும், புள்ளி விவர

கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்யபட்டது என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.